Annexure 5

# சஹாபீடியா - யுனெஸ்கோ
# ஃபெல்லோஷிப் 2019
# பின்னிணைப்பு V

## <u>விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்</u>

கீழ்க்கண்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள், 2019ம் ஆண்டின் சஹாபீடியா-**யுனெஸ்கோ** வால் அங்கீகரிக்கப்படுவார்கள்:-

1. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் ஃபெல்லோஷிப் திட்டத்தை 28 வாரங்களுக்குள், அதாவது, 01 செப்டம்பர் 2019 தொடங்கி 15 மார்ச் 2020க்குள் நிறைவு செய்ய வேண்டும்.

2. ஒரு முன்னோட்டக் கட்டுரை (நூற்பட்டியலுடன்) அல்லது ஒரு குறு ஆவணப்படம்(ஆங்கில மொழியாக்கம் மற்றும் கதைச் சுருக்கத்துடன்), அத்துடன் உதவித்தொகை/சிறப்பு மையக்கருத்துக்கள் (நூற்பட்டியல் உள்ளிட்ட) கொண்ட கட்டுரைகள், நடைமுறை செயற்பாட்டாளர்கள் மற்றும் வல்லுநர்களுடன் ஆன பேட்டிகள், அவற்றின் மொழிபெயர்ப்புகள், வீடியோக்கள், ஆடியோ பதிவுகள், புகைப்படத் தொகுப்புகள் மற்றும் புகைப்படக் கட்டுரைகள் ஆகியவை சஹாபீடியாவின் வழக்கமான திட்டங்களில் அடங்கும். விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்ப படிவத்தில் குறிப்பிட்டுள்ள ஆய்வுக்கான சமர்ப்பித்தலை மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். மேலும் கொடுக்கப்பட்டுள்ள காலக்கெடுவுக்குள் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும். சஹாபீடியா, குறிப்பிட்ட சில எழுத்து வகைகள் மற்றும் ஆவணப்பட தரங்களைப் பின்பற்றுகிறது. இதன் மாதிரிகளை இணையதளத்தின் பின்னிணைப்பு 4 ல் காணலாம்.

3. ஃபெல்லோஷிப்கான மொத்த விருதுத்தொகை இந்திய ரூபாயின் மதிப்புப்படி ரூபாய் 44,445/- (ரூபாய் நாற்பத்தி நான்கு ஆயிரத்து

நானூற்றி நாற்பத்தி ஐந்து). ஊக்கத்தொகை மற்றும் ஆய்வுத் திட்டத்தை முடிக்க மேற்கொள்ளும் முயற்சிகளுக்காக ஏற்படும் செலவினங்கள் ஆகிய இரண்டும் இவற்றில் அடங்கும். 1961ம் ஆண்டு வருவான வரி விதி சட்டப்படி, வரிகள் பிடித்தம் செய்யப்படும். இதைத் தொடர்ந்து, விண்ணப்பதாரர்கள் ரூபாய் 40,000/- பெறுவர். உள்ளூர் மொழிகளில் பணியாற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு மொழிபெயர்ப்பு பணிக்காக கூடுதலாக ரூபாய் பத்தாயிரம் அளிக்கப்படும். எனினும், ஆய்வுகள் சமர்ப்பித்தலின் போது தரமான மொழிபெயர்ப்பு இருந்தால், ரசீதின் அடிப்படையில் அதற்கான செலவுகள் திருப்பித் தரப்படும். உதவித் தொகைக்கும் மேலாக, எந்த பணமோ அல்லது நிதி உதவியோ அளிக்கப்பட மாட்டாது.

4. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு, மேற்கூறிய உதவித் தொகை மூன்று தவணைகளாக அளிக்கப்படும். ஒப்பந்தம் கையெழுத்தானவுடன் 20 சதவீதமும், முதல் இரண்டு சமர்ப்பித்தல்களை திருப்தியுடன் செய்து முடித்து பதிவேற்றினால் மேலும் 40 சதவீதமும்,சஹாபீடியாவின் மனநிறைவுக்கேற்ப ஃபெல்லோஷிப் திட்டத்தை நிறைவு செய்தால் மீதமுள்ள 40 சதவீதமும் வழங்கப்படும். உள்ளூர் மொழிகளில் பணியாற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் மொழிபெயர்ப்புப் பணிகள் பரிசீலிக்கப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர், ஃ பெல்லோஷிப் திட்டத்தின் இறுதியில் மொழிபெயர்ப்புப் பணிக்கான தொகை ரூபாய் 10,000 வழங்கப்படும்.

5. தெரிந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் **பான் (PAN) அட்டை நகல், ரத்து செய்யப்பட்ட காசோலை/வங்கிக் கணக்கு விவரங்கள் மற்றும் முறையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தக் கடிதம்** ஆகியவற்றைப் பெற்ற பின்னர், முதல் தவணைத் தொகை(மொத்த தொகையில் 20 சதவீதம்) வழங்கப்படும்.

6. சஹாபீடியாவின் திருப்திக்கேற்ப பணிகளை நிறைவு செய்து கொடுத்த பின்னர் மீதமுள்ள தவணைத் தொகைகள் அளிக்கப்படும்.

வழக்கமாக, சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுப் பணிகளை மதிப்பிடவும், பரிசீலிக்கவும் சஹாபீடியாவுக்கு நான்கு முதல் ஆறு வார கால அவகாசம் தேவைப்படும்.

7. தெரிந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மின்னஞ்சல் மூலம் மாதம் தோறும் ஆய்வு குறித்த வளர்ச்சி அறிக்கையை அனுப்புமாறு எதிர்பார்க்கப்படுகிறார்கள். முதல் மாதத்திற்குள் ஆய்வுத் திட்டம் தொடர்பான பூர்வாங்க பட்ஜெட்டை அளிக்க வேண்டும்.

8. திட்டத்திற்காக உருவாக்கப்பட்ட மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து விஷயங்களும் சஹாபீடியா ஆன்லைன் வலைதளத்தில் பதிவேற்றப்பட வேண்டும். , படைப்பாளிகளுக்கு முழு அங்கீகாரம் வழங்குவது ; ஆராய்ச்சி, அறிவு, கலைப்படைப்புக்கள் ஆகியவை பரவலாக எல்லோருக்கும் கிடைக்கச் செய்யும் இணையதள பயன்பாட்டுத் திறனை அதிகரிப்பது ; இலவச காப்புரிமை, பகிர்தல் போன்ற அணுகுமுறை ஆகியவற்றை சஹாபீடியா உறுதியுடன் கடைபிடித்து வருகிறது. இது சஹாபீடியாவின் அறிவுசார் சொத்துரிமை கொள்கையின் (CC-BY-SA 4.0) கீழ், உரிமம் பெறப்படும். சமர்ப்பிக்கப்பட்ட பணிக்கான அங்கீகாரம் தெரிந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரருக்கு அளிக்கப்படும்.

9. சமர்ப்பிக்கப்படும் ஆய்வுகளை, முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ, எந்தவொரு பதிப்பகமும்/பதிப்பகங்களும், எந்தவொரு வகையிலும், கூடுதல் அனுமதியின்றி, பணமின்றி, பயன்படுத்தவோ, எடுத்துரைக்கவோ, சஹாபீடியா மற்றும் யுனெஸ்கோவுக்கு, கட்டுப்பாடற்ற உரிமைகள் உண்டு. இது போன்ற தருணங்களில் உரிய அங்கீகாரம் வழங்கப்படும்.

10. திருப்தி அளிக்காத மற்றும் / அல்லது சர்ச்சைக்குரிய அல்லது சஹாபீடியாவிற்கு சரியென தோன்றும் வேறு எந்தவொரு காரணத்துக்காகவும், எவ்வித கருத்துக்களையும் நீக்கும் உரிமையை சஹாபீடியா பெற்றுள்ளது.

11. தெரிந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரரின் ஃபெல்லோஷிப் பணி, சஹாபீடியா மற்றும் யுனெஸ்கோவுக்கு, தெரியாமலோ அல்லது அனுமதியின்றியோ வேறு எங்கேனும் வெளியிடப்பட்டால், அவர்கள் பணிப்பொறுப்புக்களில் இருந்து விடுவிக்கப்படுவர்.

12. 1957ம் ஆண்டின் இந்திய பதிப்புரிமை சட்டத்தின் பிரிவுகள் 51, 63 மற்றும் 65ன் கீழ், ஆய்வுப் பணிகள் தொடர்பாக மற்றவர்கள் கூறும் மீறல் மற்றும் மோசடி செய்தல் போன்றவற்றிற்குப் பதிலளிக்கும் எந்தக் கடமையும் சஹாபீடியா மற்றும் யுனெஸ்கோவுக்குக் கிடையாது. ஆய்வுப் பணி மேற்கொள்பவர் சஹாபீடியாவிற்கு சமர்ப்பிக்கும் ஆய்வுகள், அசல் சொந்த பணியாக இருக்க வேண்டும். வேறு வகையிலோ அல்லது வேறு எந்த முறையிலோ இருந்து பெற்றதாக இருக்கக் கூடாது. சமர்ப்பிக்கப்பட்ட அனைத்துப் பணிகளும், கருத்துத் திருட்டைத் தடுக்கும் மென்பொருள் மூலமாக, தீவிர கண்காணிக்கு உள்ளாக்கப்படும்.

13. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், சஹாபீடியா மற்றும் யுனெஸ்கோவையும், மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு அதிகாரிகள், ஊழியர்கள், ஏஜண்டுகள், பயிற்சியாளர்கள் (இனிமுதல் மொத்தமாக இழப்பீட்டுப் பார்ட்டிகள் என்றழைக்கப்படுவர்) ஆகியோருக்கு எதிரான உரிமைக்கோரல்களில் இருந்து அவர்களைப் பாதுகாக்க வேண்டும்., மேலும், கோரிக்கைகள், செயல்கள், செயல்விளைவுகள், விசாரணைகள், நீதிகள், மதிப்பீடுகள், குறைபாடுகள் மற்றும் இழப்பீட்டுப் பார்ட்டிகளுக்கு எதிராகக் கொண்டு வரப்படும் குற்றச்சாட்டுக்களில் இருந்து எழும் சேதங்கள், இழப்புகள், செலவுகள், பொறுப்புகள் மற்றும் செலவினங்கள் (தொழில்முறை சார்ந்த வழக்கறிஞர் மற்றும் அதற்குண்டான கட்டணம் உட்பட) , நேரடியாகவோ, மறைமுகமாகவோ, மூன்றாம் நபரின் எந்தவொரு அறிவுசார் சொத்துரிமையும் மீறப்பட்டால்,அவை பாதுகாக்கப்பட வேண்டும்.

14. தெரிந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் கீழ்க்கண்டவற்றை அளிக்கத் தவறினால் :-

(i) சஹாபீடியா திருப்தி அடையும் வகையில் காலக்கெடுவுக்குள் ஆய்வுப் பணிகளை சமர்ப்பித்தல்
(ii) காலவரிசை மற்றும் பட்டியல்களை தீவிரமாகப் பின்பற்றுதல்
(iii) மாதாந்திர வளர்ச்சி அறிக்கையை சமர்ப்பித்தல்.

ஃபெல்லோஷிப்பை ரத்து செய்யும் முழு உரிமையும் சஹாபீடியாவுக்கு உண்டு. ஏதேனும் காரணங்களுக்காக ஃபெல்லோஷிப் உரிமை ரத்து செய்யப்பட்டால், முன்னதாக வழங்கப்பட்ட பணத்தை திரும்பப் பெறும் உரிமையும், மேலும் பணம் அளிக்காமல் நிறுத்தி வைக்கவும், ஃ பெல்லோஷிப் சான்றிதழ் வழங்குவதும் நிறுத்தப்படும். ரத்து செய்யப்படுவது குறித்து தெரிந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு எழுத்து மூலம் சஹாபீடியா அறிவிக்கும். மேற்கூறப்பட்ட காராணங்களில் ஏதேனும் ஒன்றினால் ஃபெல்லோஷிப் ரத்து செய்யப்பட்டால், அவர், சஹாபீடியா - யுனெஸ்கோ ஃபெல்லோவாக அங்கீகரிக்கப்பட மாட்டார்.